TNPSC JOB

T

Reg. No.:

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## வகுப்பு - 8

காலம் : 2.30 மணி | தமிழ் | மதிப்பெண்கள்:100

பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15

1. 'மாங்கனி நகரம்' என்று அழைக்கப்படும் நகரம் ..........
   அ) நாமக்கல் ஆ) கரூர் இ) சேலம் ஈ) நீலகிரி
2. வானில் கரு .......... தோன்றினால் மழை பொழியும் என்பர்.
   அ) முகில் ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்
3. தோட்டத்தில் தம்பி விதைத்த .......... எல்லாம் முளைத்தன.
   அ) செடிகள் ஆ) கொடிகள் இ) மரங்கள் ஈ) வித்துகள்
4. சொல்வளமும் நற்பண்பும் உடையவர்கள் தாம் பேசும் .......... தகுதி அறிந்து பேச வேண்டு
   அ) சொல்லின் ஆ) அவையின் இ) பொருளின் ஈ) பாடலின்
5. எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது ......
   அ) செய்வினை ஆ) செயப்பாட்டுவினை இ) தன்வினை ஈ) பிறவினை
6. கதிர்+ஈன என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் .........
   அ) கதிரென ஆ) கதியீன இ) கதிரீன ஈ) கதிரின்ன
7. புகழாலும் பழியாலும் அறியப்படுவது .......
   அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை இ) நடுவுநிலைமை ஈ) பொருளுடைமை
8. இன்றைய கல்வி .......... நுழைவதற்குக் கருவியாகக் கொள்ளப்பட்டு வருகிறது.
   அ) வீட்டில் ஆ) நாட்டில் இ) பள்ளியில் ஈ) தொழிலில்
9. பழங்காலத்தில் விலையைக் கணக்கிட அடிப்படையாக அமைந்தது .........
   அ) புல் ஆ) நெல் இ) உப்பு ஈ) மிளகு
10. 'முத்தமிழ்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........
    அ) மூன்று தமிழ் ஆ) முத்து+தமிழ் இ) மு+தமிழ் ஈ) முத்+தமிழ்
11. சேரர்களின் தலைநகரம் ......
    அ) காஞ்சி ஆ) வஞ்சி இ) தொண்டி ஈ) முசிறி

பாடலைப்படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஏர்கெழு செல்வர் களம் நிறைக! அக்களத்துப்
போரெல்லாங் காவாது வைகுக! போரின்
உருகெழும் ஓதை வெரிஇப் பெடையோடு
நாரை பிரியும் விளைவயல்
யாணர்த் தாக அவன் அகன்றலை நாடே!

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் .....
    அ) தனிப்பாடல் திரட்டு ஆ) சிலப்பதிகாரம் இ) மாதவி காவியம் ஈ) தகடூர் யாத்தி
13. 'யாணர்' என்பதன் பொருள் ......
    அ) புது வருவாய் ஆ) அஞ்சி இ) ஓசை ஈ) தங்குக
14. 'அவன் அகன்றலை நாடே' என்னும் அடியில் 'அவன்' எனக் குறிப்பிடப்படுபவன் ......
    அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) பல்லவன்
15. பாடலடிகளில் இடம் பெறும் பறவை .......
    அ) மயில் ஆ) குயில் இ) நாரை ஈ) குருவி

Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB



பகுதி – ஆ

பிரிவு – அ

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (வினா எண் 21க்குக் கட்டா வினா) 4 x 2 = 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) கோழி வளர்ப்பிலும் முட்டை உற்பத்தியிலும் நாமக்கல் தென்னிந்தியாவிலேயே முதன்மையான இடம் வகிக்கின்றது.

ஆ) வாழ்விற்குரிய இன்பத்துறைகளுள் காவிய இன்பமும் ஒன்று

17. கொல்லிமலையைப் பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?

18. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக.

19. நன்மையைத் தரும் செயலை ஒருவரிடம் ஒப்படைக்கும் வழி யாது?

20. தன்வினை என்றால் என்ன? எ.கா. தருக.

21. 'சொல்' என முடியும் குறட்பாவினை எழுதுக.

பிரிவு – ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 5 x 2 = 10

22. மரபுத் தொடர்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) வாழையடி வாழையாக ஆ) முதலைக் கண்ணீர்

23. அகர வரிசைப்படுத்துக.

எழுத்து, ஒலிவடிவம், அழகுணர்ச்சி, ஏழ்கடல், இரண்டல்ல, ஊழி, உரைநடை, ஔகாரம், ஓலைச்சுவடிகள், ஆரம், ஐயம், ஈசல்

24. தொடர்களை மாற்றுக.

அ) அதிகாலையில் துயில் எழுவது நல்லது. (விழைவுத் தொடர்)

ஆ) காட்டில் புலி நடமாட்டம் உள்ளது (வினாத் தொடர்)

25. கலைச்சொற்கள் தருக. அ) Loom ஆ) Epigraphy

26. ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக. அ) அணி ஆ) படி

27. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) கடலுக்கு வேறு பெயர் ....... (பரவை/பறவை)

ஆ) பறவை வானில் ....... (பறந்தது/பரந்தது)

28. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.

அ) சென்றனர் ஆ) தருகின்றனர்

பகுதி – இ

பிரிவு – அ

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்: 2 x 3 = 6

29. தமிழ்மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துக்களை எழுதுக.

30. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் தமிழர்கள் சிறந்து விளங்கியுள்ளனர். கடல் வணிகத்தில் சேரநாடு சிறப்புற்றிருந்தது. அதற்கு அந்நாட்டின் இயற்கை அமைப்பே காரணமாக அமைந்திருந்தது. சேரர்கள் வலிமை மிகுந்த கப்பல் படையை வைத்திருந்தனர். முசிறி சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாக விளங்கியது.

வினாக்கள்

அ) கடல் வணிகத்தில் எந்நாடு சிறப்புற்று இருந்தது?

ஆ) சேரர்களின் சிறந்த துறைமுகங்களுள் ஒன்று எது?

இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com

TNPSC JOB



பிரிவு – ஆ

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
(வினா எண் 34க்குக் கட்டாய வினா) 2 x 3 = 6

32. கரூர் மாவட்டம் பற்றிய செய்திகளைச் சுருக்கி எழுதுக.
33. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
34. 'மாமழை போற்றுதும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல் (அல்லது)
'ஏழ்கடல்' எனத் தொடங்கி 'வாழியவே' என முடியும் பாரதியார் பாடல்

பிரிவு – இ

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 x 3 = 6

35. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?
36. 'ஏற்றினான்' என்பது எவ்வகை வினை என்பதை விளக்குக.
37. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

பகுதி – ஈ

ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும். 5 x 5 = 25

38. அ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க. கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
(அல்லது)
ஆ) கொங்குநாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகம் குறித்து எழுதுக.
39. அ) இல்பொருள் உவமை அணியைச் சான்று காட்டி விளக்குக. (அல்லது)
ஆ) சொற்பொருள் பின்வருநிலை அணியை விளக்குக.
40. அ) கலைத்திருவிழாப் போட்டியில் மாநில அளவில் முதல் பரிசு பெற்ற தோழியைப் பாராட்டிக் கடிதம் எழுதுக. (அல்லது)
ஆ) இருப்பிடச் சான்றிதழ் வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.
41. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) கோழி ........ (கூவும்/கொக்கரிக்கும்)
ஆ) பால் ........ (குடி/பருகு)
இ) சோறு ......... (தின்/உண்)
ஈ) பூ ......... (கொய்/பறி)
உ) ஆ ........ (நிரை/மந்தை)
42. பின்வரும் பத்தியில் உரிய இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுக.
நூல் பல கல் என்பர் பெரியோர் அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா முடியாது நூலகங்கள் இக்குறையை நீக்க உதவுகின்றன நூலகத்தின் வகைகளாவன மைய நூலகம் மாவட்ட நூலகம் கிளை நூலகம் ஊர்ப்புற நூலகம்
43. அ) தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக. (அல்லது)
ஆ) இயற்கைச் சீற்றங்களினால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?

பகுதி – உ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 x 8 = 24

44. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. (அல்லது)
ஆ) தமிழகக் கைவினைக் கலைகளைப் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.
45. அ) 'காலம் உடன் வரும்' – கதையைச் சுருக்கி எழுதுக. (அல்லது)
ஆ) தமிழில் ஓரெழுத்து ஒருமொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
46. அ) 'உழவே உயர்வு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)
ஆ) 'எனது தாய்மொழி' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

Scanned with Cam

TNPSC JOB | www.tnpscjob.com